செ.வெ. எண்: 536 நாள்: 11.09.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (11.9.2012) தலைமைச் செயலகத்தில், 17 கோடியே 46 லட்சம் ரூபாய் செலவில் 170 புதிய 108 அவசர கால ஆம்புலன்ஸ் ஊர்திகள், 7 கோடியே 76 லட்சம் ரூபாய் செலவில் 76 புதிய குளிரூட்டு வசதியுடன் கூடிய கட்டணமில்லா அமரர் ஊர்திகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 19 கோடி ரூபாய் செலவில் 348 புதிய வாகனங்கள் ஆகியவற்றை வழங்கினார்கள்.

அவசர காலங்களில் மக்களின் மருத்துவ தேவையைப் பூர்த்தி செய்ய 108 அவசர கால ஆம்புலன்ஸ் சேவை தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த சேவையில் தற்பொழுது 434 ஆம்புலன்ஸ் ஊர்திகள் 32 மாவட்டங்களில் இயங்கி வருகின்றன. மேலும், ஆம்புலன்ஸ் மருத்துவ சேவை ஏழை, எளிய மக்களுக்கு உடனுக்குடன் கிடைத்திடும் வகையில் 17 கோடியே 46 லட்சம் ரூபாய் செலவில் 170 புதிய 108 அவசர கால ஆம்புலன்ஸ் ஊர்திகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று பொது மக்களின் பயன்பாட்டிற்காக வழங்கினார்கள்.

அரசு மருத்துவமனைகளில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி இறக்கும் ஏழை நோயாளிகளின் உடலை அவர்களுடைய வீட்டிற்கோ அல்லது அடக்கம் செய்யும் இடத்திற்கோ எடுத்துச் செல்ல வசதியாக தமிழகத்தில் ஏற்கெனவே 32 மாவட்டங்களில் 62 இலவச அமரர் ஊர்திகள் தமிழக அரசால் இயக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தச் சேவையினை அதிகரிக்கும் வகையில் 7 கோடியே 76 லட்சம் ரூபாய் செலவில் 76 புதிய அமரர் ஊர்திகளை இன்று வழங்கினார்கள்.

தமிழகத்தில் ஆரம்ப சுகாதார நிலையப் பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு துரிதமாக மருத்துவ சேவை அளித்திட வாகனங்கள் இல்லாத ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு உடனடியாக வாகனங்கள் வழங்க ஆணையிட்டார்கள். அதன்படி, 19 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்ட 348 புதிய வாகனங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு இன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை முதன்மைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.
நாள்: 11.9.2012